# காஞ்சிபுரம் மாநகராட்சி

## 31.10.2022

## அன்று நடைபெறும்

## மாமன்ற அவசரக் கூட்டத்திற்கான

## மன்ற பொருள்கள்

நாள் 31.10.2022 திங்கள் கிழமை காலை – 10.00 மணி

# <u>காஞ்சிபுரம் மாநகராட்சி</u>

## கூட்ட எண். 8 / 2022–2023

காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா மாளிகையில் 2022–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31–ம் தேதி திங்கள் கிழமை காலை 10.00 மணிக்கு கீழ்கண்ட பொருள்கள் பற்றி கலந்து ஆலோசித்து முடிவு செய்ய காஞ்சிபுரம் மாமன்றத்தின் அவசரக் கூட்டம் நடைபெறும்.

மேற்படி கூட்டத்திற்கு துணை மேயர், மண்டலத் தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| | |
|---|---|
| மாநகராட்சி அலுவலகம் | மேயர் |
| காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் மாநகராட்சி |

# காஞ்சிபுரம் மாநகராட்சி
# கூட்ட எண்.8/2022-2023

## கூட்டப் பொருள்கள்

**1)** தமிழ்நாடு அரசிதழ் எண்.358 நாள்.24.06.2022 – ல் பகுதி III பிரிவு 1 (a) –ல் அரசாணை (நிலை) எண். 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.06.2022–ன்படி வார்டு குழு (Ward Committee) மற்றும் பகுதி சபா (Area Sabha) உருவாக்குவதற்கும் மற்றும் அதனை செயல்படுத்துதலுக்கும் விதிகள் குறித்த ஆணை வெளியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் அரசாணையில், வார்டு குழுக்கள் அமைக்கவும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (வார்டு குழு மற்றும் பகுதி சபா) விதிகள் 2022 விதி 8 –ல் குறிப்பிட்டவாறு விதி 3 (1) –ன்படி வார்டு குழுக்களுக்கு மாநகராட்சி பகுதி வார்டு ஒன்றினை மூன்று முதல் ஐந்து பகுதி வரை சபாவாக பிரித்து ஒவ்வொரு பகுதி சபாவிற்கும் ஒரு உறுப்பினரை நியமிக்கவும் நகர்மன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (வார்டு குழு மற்றும் பகுதி சபா) விதிகள் 2022, விதி 9–ன்படி 51 வார்டு பகுதியை 250 பகுதி சபாக்களாக மறு வரையறை (Delimitation) செய்து அரசிதழில் பிரசுரம் செய்ய வேண்டியுள்ளதால் இப்பணியின் அவரசர அவசியம் கருதி காஞ்சிபுரம் மாநகராட்சியின் 51 வார்டில் 250 பகுதி சபா இணைப்பில் கண்டுள்ளவாறு பிரிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம் .

(ந.க. எண் 9717/2022/எப்1)

**தீர்மான எண். 483 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**2)** தமிழ்நாடு அரசிதழ் எண்.358 நாள்.24.06.2022 –ல் பகுதி III பிரிவு 1 (a) –ல் அரசாணை (நிலை) எண். 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.06.2022 –ன்படி வார்டு குழு (Ward Committee) மற்றும் பகுதி சபா (Area Sabha) உருவாக்குவதற்கும் மற்றும் அதனை செயல்படுத்துதலுக்கும் விதிகள் குறித்த ஆணை வெளியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் அரசாணையில், வார்டு குழுக்கள் அமைக்கவும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (வார்டு குழு மற்றும் பகுதி சபா) விதிகள் 2022 விதி 8 –ல் குறிப்பிட்டவாறு விதி 3 (1) –ன்படி வார்டு குழுக்களுக்கு மாநகராட்சி பகுதி வார்டு ஒன்றினை மூன்று முதல் ஐந்து பகுதி வரை சபாவாக பிரித்து ஒவ்வொரு பகுதி சபாவிற்கும் ஒரு உறுப்பினரை நியமிக்கவும் நகர்மன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (வார்டு குழு மற்றும் பகுதி சபா) விதிகள் 2022, விதி 9–ன்படி 51 வார்டு பகுதியை 250 பகுதி சபாக்களாக மறு வரையறை (Delimitation) செய்யப்பட்டுள்ளது.

மேலும் பகுதி சபாக்களின் எல்லை விவரங்களை காஞ்சிபுரம் மாவட்ட அரசிதழில் 132 எண்ணிட்டு 28.10.2022 ஆம் தேதி அன்று பிரசுரம் செய்து வெளியிடப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (வார்டு குழு மற்றும் பகுதி சபா விதிகள் 2022–ல் விதி எண். 3 (2) – ல் ஒரு பகுதி சபாவிற்கும் ஒரு உறுப்பினரை வார்டு குழுவிற்கு மாமன்றம் நியமனம் செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அரசாணை (நிலை) எண்.93 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.06.2022–ன்படி வார்டு குழுக்களுக்கும் மற்றும் ஒரு சபா குழுக்களுக்கும் இம்மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்களை செயலாளர்களாக பணியாற்ற உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வரப்பெற்ற அரசாணை (நிலை) எண்.92 மற்றும் 93 ஆகியவற்றை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டதில் மாமன்றம் தனது தீர்மானம் எண்.447 நாள்.29.09.2022 –ல் பதிவு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் ஒரு வார்டுக்கு மூன்று முதல் ஐந்து சபா உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் 51 வார்டுகளுக்கு 250 சபாக்குழு உறுப்பினர்கள் மற்றும் வார்டு குழு செயலாளர்கள் மற்றும் பகுதி சபா செயலாளர்கள் நியமிப்பது தொடர்பாக மாமன்றத்தால் பரிந்துரை செய்யப்பட்ட நபர்களின் விவரம் பின்வருமாறு பட்டியலில் கண்டுள்ளவாறு மன்றம் அனுமதி வழங்க கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

இது தொடர்பாக மாமன்றம் 250 பகுதி சபா (Area Sabha) 250 உறுப்பினர்கள் மாமன்றத்தால் நியமனம் செய்ய அளிக்கப்பட்டுள்ள பட்டியல் மீது அரசாணைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

(ந.க.எண் 9717/2022/எப்1)

**தீர்மான எண். 484 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**மாநகராட்சி அலுவலகம்,**
**காஞ்சிபுரம்.**
**நாள்.31.10.2022**

**(ஒம்) மூ. மகாலட்சுமி**
**மேயர்**
**காஞ்சிபுரம் மாநகராட்சி.**

**// உண்மை நகல் //**

**ஆணையாளர்,**
**காஞ்சிபுரம் மாநகராட்சி.**